**மேன்மை மிகு ஆகா கான் இந்திய வருகை (செப்டம்பர் 17-29, 2013)**

செப்டம்பர் 17, 2013

மேன்மைமிகு ஆகா கான் இந்தியாவில் 2013 செப்டம்பர் 17ந்தேதி முதல் 29ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். குடியரசுத் துணைத்தலைவருடன் அவர் செப்டம்பர் 18ந்தேதி பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்.

அவரது இந்த பயணத்தின் போது மேதகு குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமரை அவர் சந்திக்கிறார். வெளியுறவுத்துறை அமைச்சர், நகர்புற மேம்பாடு மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர், கலாசாரத் துறை அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற மாநிலங்களவை எதிர்கட்சித்தலைவர் ஆகியோர் மேன்மைமிகு ஆகா கானை சந்திக்கிறார்கள்.

ஹூமாயூன் கல்லறை அமைந்துள்ள புராதன வளாகப் மறுசீரமைப்புப்பணிகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் 2013 செப்டம்பர் 18ந்தேதி புதன்கிழமையன்று நடைபெற உள்ள நிகழ்ச்சிக்கு மேன்மை மிகு ஆகா கான் தலைமை தாங்குவார். இவை தவிர, அவர் ஐதராபாத் மற்றும் மும்பைக்கு செல்கிறார். அங்கு ஆகா கான் மேம்பாட்டு வலையம் (Aga Khan Development Network (AKDN) )பல்வேறு முன்னோடி மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.

**புதுதில்லி**
**செப்டம்பர் 17, 2013**